**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**STC.No. 76/2024**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : விஜயா |
| Father's Name/ Husband's Name | : ஏழுமலை |
| Village & Taluk | : சத்தியமங்கலம் |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Age | : 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026**

(1 ம் எதிரி ஆஜர் 2 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது சத்தியங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு.சையது முகமது அலி என்பவர் பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டபடியாலும் அவரது கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 19.12.2021 அன்று இரவு 8.30 மணிக்கு சத்தியமங்கலம் கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. சையது முகமது அலி என்பவர் பணியில் இருந்த போது அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 475/2021 இதச பிரிவுகள் 294(பி), 324, 379 இதச – ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை வரிசை முறையே அ.சா.2 மற்றும் அசாஆ–3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் கடந்த 20.12.2021 காலை 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாரிமுத்து மற்றும் வேலு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, அம்மனியம்மாள், ரமணி, சண்முகம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு அவரது விசாரணையில் வாதி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு வெளிக்காயம் எதுவும் இல்லை என்பதாலும், அவரது பொருட்கள் திருடுபோகவில்லை என்பதும் தெரிய வந்ததாலும், மேலும், அவரது விசாரணையில் எதிரிகள் நந்தினி மற்றும் ரஞ்சி ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் அவர்களை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து இவ்வழக்கின் சட்டப்பிரிவு பிரிவு 294(பி), 324, 379 இதச என்பதை 294(பி), 352 இதச என பிரிவு மாற்றல் மாற்றல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **மேற்படி பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 352 –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும், அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித

தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B. Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.